DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS No. 4 /2019**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | திருமுருகன் |
| Father's / Husband's Name | : | குப்புசாமி |
| Age | : | 44 |
| Religion | : | Hindu |
| Calling | : | வியாபாரம் |
| Caste | : | வன்னியர் |
| Village | : | ஆற்காடு |
| Date | : | 03.01.2020 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் வாதி. வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை தான். அதை படித்து பார்த்துதான் கையெழுத்துப்போட்டேன். ஓ.எஸ. எண் 29/16ல் 21.11.2017 அன்று வழங்கிய தீர்ப்புரை ஜெராக்ஸ் வா.சா.ஆ.1, (ஆட்சேபணையுடன்) சென்னை உயர்நீதிமன்றம் WP No.5484/2016ல் 15.02.2016 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் வா.சா.ஆ.2, ஆற்காடு நகராட்சி ஆணையருடைய இறுதி விசாரணை அறிக்கை வா.சா.ஆ.3, வெல்டிங் மிஷின் கொண்டு பூட்டை உடைக்கும் போட்டோ வா.சா.ஆ.4, (ஆட்சேபணையுடன்) என்னுடைய பொருட்களை பிரதிவாதியின் ஆட்கள் லாரியில் ஏற்றும் போட்டோக்கள் (4 எண்ணம் ) மற்றும் சி டி வா.சா.ஆ.5, என்னுடைய கடையின் கையகப்படுத்தப்பட்ட பொருட்களின் பட்டியல், போட்டோ மற்றும் சி டி வா.சா.ஆ.6 வரிசை (ஆட்சேபணையுடன்), சென்னை உயர்நீதிமன்றம் 06.04.2018

அன்று நீதிமன்ற அவமதிப்பு எண் 1830/2017ல் பிறப்பித்த உத்தரவு நகல் வா.சா.ஆ.7, சென்னை உயர்நீதிமன்றம் திருப்பிய சி ஏ நகல் வா.சா.ஆ.8. WP No.17407/2018ல் 12.07.2018 அன்று பிறப்பித்த உத்தரவு நகல் வா.சா.ஆ.9, சென்னை உயர்நீதிமன்றம் 04.09.2018 அன்று நீதிமன்ற அவமதிப்பு எண் 1830/ 2017ல் பிறப்பித்த உத்தரவு நகல் வா.சா.ஆ.10, என்னுடைய மனைவி பிரதிவாதிக்கு 01.10.2018 அன்று அனுப்பிய கடிதம் மற்றும் அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.11 மற்றும் 12, நான் பிரதிவாதிக்கு 22.10.2018 அன்று அனுப்பிய கடிதம் வா.சா.ஆ.13, பிரதிவாதி கடிதத்தை பெற்றுக்கொண்டதற்குரிய ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.14, 19.11.2018 அன்று நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பு நகல் வா.சா.ஆ.15, அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்குரிய ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.16. பிராதுபடி தீர்ப்பாகவேண்டும்.

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**